நெரூர்

ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திராள்

சரித்திரச் சுருக்கம்

நெரூர் ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திராள்
சரித்திரச் சுருக்கம்

நெரூர் ஸ்ரீ பிரம்மேந்திராள் அதிஷ்டானம்

ஸ்ரீ சுவாமி. சதாசிவானந்த அவர்களால்
தொகுக்கப்பெற்றது.

ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திராள்
ஆலயத் திருப்பணிக் கமிட்டி
வெளியீடு.

இரண்டாம் பதிப்பு

1968

விலை 50 பைசா

ஓம் தத் ஸத் பரப்பிரம்மணே நம:


முகவுரை

பொன்னும் புவியும்போற்றும் புனிதம் வாய்ந்த இந்தியா வடதிசையில் எல்லாச் சிறப்பும் அமைந்த இமயத்தையும், மற்ற மூன்று திசைகளில் ஆழ்கடல்களையும் எல்லை அரணாகப் பெற்றுள்ளது.

இப்பரதகண்டத்தில் மக்கட் பிறப்புக் கிடைக்கப்பெற்ற நாம்பெரும் பாக்கியசாலிகளாகின்றோம். ஜன்ம,ஜரா,மரண துக்கம் உடல்களுக்கென்றும் ஆனந்த சொருபன் தானென்றும் திட அனுபவமுடைய மெய்ஞ்ஞானிகள் இந்தியாவிலேயே அதிகம் தோன்றியுள்ளனர். தமது எதார்த்த சொருபமுணர்ந்து அனுபவிக்கும் மகரிஷிகள் தரிசனமும், சரிதங்களும், அமிர்தவடிவ வசனங்களுமே மக்களின் உயர் நலங்களைப் பெருக்குவதில் தலைசிறந்தனவாம். மஹரிஷிகளின் சரித்திரங்களைக் கற்க, கேட்க, சிந்திக்கக் கிடைக்கப்பெற்ற சமயமே மனிதப் பிறப்பின் தலைசிறந்த ஐஸ்வரியம் சேகரித்தற்கு அமைந்த காலமென்பது சர்வ நிச்சயம்.

19—6—1965
நெரூர்

சதாசிவம்



ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திராள்

உ

ஓம் தத் ஸத் பரப்பிரம்மணே நம:

முகவுரை

பொன்னும் புவியும்போற்றும் புனிதம் வாய்ந்த இந்தியா வடதிசையில் எல்லாச் சிறப்பும் அமைந்த இமயத்தையும், மற்ற மூன்று திசைகளில் ஆழ்கடல்களையும் எல்லை அரணாகப் பெற்றுள்ளது.

இப்பரதகண்டத்தில் மக்கட் பிறப்புக் கிடைக்கப்பெற்ற நாம்பெரும் பாக்கியசாலிகளாகின்றோம். ஜன்ம.ஜரா.மரண துக்கம் உடல்களுக்கென்றும் ஆனந்த சொரூபன் தானென்றும் திட அனுபவமுடைய மெய்ஞ்ஞானிகள் இந்தியாவிலேயே அதிகம் தோன்றியுள்ளனர். தமது எதார்த்த சொரூபமுணர்ந்து அனுபவிக்கும் மகரிஷிகள் தரிசனமும், சரிதங்களும், அமிர்தவடிவ வசனங்களுமே மக்களின் உயர் நலங்களைப் பெருக்குவதில் தலைசிறந்தனவாம். மஹரிஷிகளின் சரித்திரங்களைக் கற்க, கேட்க, சிந்திக்கக் கிடைக்கப்பெற்ற சமயமே மனிதப் பிறப்பின் தலைசிறந்த ஐஸ்வரியம் சேகரித்தற்கு அமைந்த காலமென்பது சர்வ நிச்சயம்.

19—6—1965
நெரூர்

சதாசிவம்



ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திராள்

ஓம் தத் ஸத் பரப்பிரம்மணே நம :

சதாசிவப் பிரம்மேந்திரரள் சரித்திரச் சுருக்கம்.

ஈசனு ஞானி யிருந்துள விடத்தே யிருப்பது முத்திதா னந்தத்
தேசிக னேவல் செய்பவன் காலென் சென்னியி லிருப்பது மன்னி
மாசிலாப் பரம ஞானியா முனிக்கு மகேசனு மொப்பலன் மதிக்கில்
ஆசிலா வரியு மொப்பல னுனு மொப்பல னேவரொப் பாரே.

தெய்வத் தமிழ் வளர்ந்து சோமசுந்தரக் கடவுள் பல திருவிளையாடல்கள் புரிதற்கேதுவாயுமிருந்த மதுரை மாநகரிலே (300) முந்நூறு வருடங்கட்கு முன்பு ஆந்திரப் பிராமண குலத்தில் ஆசார சீலராக இருந்த் சோமனுத அவதானி என்பவர் பல கலைகளையும் கற்று; உலகம் போற்றும் உத்தமராய் விவேக வைராக்கியத் துடன்; பிரார்த்தனை மந்திரஜப விரதானுஷ்டானங்களைப் பற்றி வாழ்ந்துவரும் அக்காலத்தில் அவரது பெற்ருேர்கள் ஒழுக்கம் நிறைந்த குலத்தில் பார்வதி என்னும் நாமம் பெற்ற கற்பரசியைச் சோமனுத அவ்தானிக்குத் திருமணம் முடித்தனர். முறைப்படி கிருகஸ்தாசிரம்ம் நடத்திவந்த அத் தம்பதிகட்டு நெடு நாட்கள் சந்ததிகிடைக்கப் பெருமல் தீர்த்த யாத்திரை செய்து பல மகரிஷிகள் ஆசியும் பெற்று, இறுதியாக இராமேஸ்வர யாத்திரையையும் முடித்துவந்த பின்னர் இராமநாதர் அனுக்கிரகத்தால் பார்வதிதேவி கருவுற்று,

சுபதினத்தில் சுப முகூர்த்தத்தில் சுவர்ண விக்ரகம் போன்ற குழந்தையைப் பெற்றனர். குழந்தையின் பொலிவும், புன்முறுவல் தோற்றமும் கண்டு, பெற்றோர் சிவராம கிருஷ்ணனென நாமம் சூட்டிக் கடவுளிடம் பிக்ஷையாகத் தமக்குக் கிடைக்கப்பெற்ற குழந்தையாகையால் பிக்ஷுகுப்தன் என்னும் செல்வப் பெயர் வைத்து வளர்த்து வந்தனர்.

சிவராம கிருஷ்ணன் உடல் பாலப்பருவத்தில் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாயுர்; உயிர் உண்மையறிவானந்தம் பெற்று அருளோடும் வளர்ந்துவந்தது. குழந்தை ஆடுவதெல்லாம் ஆனந்த நிர்த்தனம், பாடுவதெல்லாம் பரம்பொருள் பற்றிய சங்கீர்த்தனமாக இருந்தது. இளமையிலேயே வேதாத்யயனம் முடித்து, உள்ளத் தெளிவு பெற்ற இவர் பல கலைகளையும் பழுதறவோதித் தேர்ச்சிபெற்றார். தாயாரின் வேண்டுகோளுக்கு மறுப்புக்கூற முடியாத நிலையில் திருமணம் நிறைவுற்றது. சில வருடங்கட்குப் பிறகு மணமகள் பருவம்பெற்று வீட்டிற்கு வந்தநாளில் விசேட விருந்து தாயாரால் நடத்தப்பட்டது. அந்தத் தினத்தில் சிவராம கிருஷ்ணன் பசிநேரத்திற்கு உணவு கிடைக்காமல் வாடினார். விசாரம் பெருகிற்று. பொய்யுலக வாழ்வின் மத்தியில் துன்பங்களை அனுபவித்தற்கேது இல்வாழ்க்கை. துன்பங்களைத்துடைத்தற்கேது

துறவு வாழ்க்கையென யூகித்து உறுதி பூண்டு அப்போதே வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டு விட்டார்.

> இல்லம் இளமை எழில்வனப்பு மீக்கூற்றம்
> செல்வம் வலியென்றிவை யெல்லாம் — மெல்ல
> நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்
> தலையாயார் தாமுய்யக் கொண்டு.

> "இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
> பெருமை பிறங்கிற் றுலகு"
> (பொய்யாமொழி)

நான்கு சாதனங்களும் பெற்ற இவர் தெளிந்த மனதுடன் திருவிசைநல்லூர் ஐயாவாள் (ஸ்ரீதர வேங்கடேசர்) என்பவரிடம் சில நூல்களைக் கற்றார். பின்னர் சுரோத்ர பிரம்மநிஷ்டா பண்டிதராயிருந்த ஸ்ரீ பரமசிவேந்திராளிடம் அடைக்கலம் புகுந்து தீக்ஷை பெற்று சதாசிவமெனப் பரமசிவேந்திரரால் தரப்பட்ட ஆசிரமநாமத்துடன் வேதாந்த சாஸ்திரங்களையும் நன்கு கற்றார். உள்ளத்தில் சந்தேகம் தோன்றும்போது குருநாதரிடம் கேட்டுத் தெளிவுபெற்று மகிழ்வார். தனது சகாக்களுடன் தர்க்கம் பேசி வெற்றிபெறுவார். இப்படியாக அத்யாத்ம சாஸ்திர ஆராய்ச்சியில் நிபுணத்வம் பெற்றார். யாவரையும் தர்க்கித்து எளிதில் வென்று

விடுவார். இவர் தர்க்கித்துப் பிறரை வாதத்தில் வெல்வதிலேயே காலங் கழிக்கிருர் என்பதறிந்த குருதேவராகிய ஸ்ரீ பரமசிவேந்திராள் ஒருதினம், ஊரார் வாயடக்கக் கற்றுக்கொண்ட நீ உன் வாயடக்கக் கற்றுக் கொள்ளாததென்னே! யென்று அருளோடு சினந்தனர். அதுமுதல் சதாசிவம் மௌனவிரதம் கைக்கொண்டு குருநாதரிடம் விடைபெற்று வனங்களிலும், நதி தீரங்களிலும் தங்கி ஊணுறக்கமின்றிக் கடுந் தவமியற்றினர். பின்னர் கரூருக்கருகாமையில் உள்ள நெரூர்க்கிராம ஆரண்ய வனப்பும், காவிரி தெக்ஷிணமாகச் செல்லும் காட்சியும், நிர்ஜ்ஜனப் பிரதேசமும் மனதைக் கவர்ந்தது இதுவே தவத்திற்குரிய இடமெனத் தீர்மானித்தார். ஜாதி வருணுசிரம தருமங்கள் உடலபிமான முடையோர்க்கே என எண்ணி சகல பற்றுக்களையும், அபிமானங்களையும் அகற்றி எல்லா ஜீவராசிகளும் விரும்பும் நிலையில் மனதைப் பண்படுத்திக்கொண்டு தனது நிஜசொருபமாக வீற்றிருக்க முயன்ருர். தபோ பலத்தால் அணிமாதி சித்திகளும், பஞ்சயோகங்களும் கைவரப்பெற்றது. ஜடபரதர்போல் வனத்தில் நிஷ்டையில் உட்கார்ந்திருந்த சமயம் விறகு வெட்ட வந்தவர்களில் ஒருவன் ஒருசுமை விறகை இவர் தலையில் வைத்து எழுந்து நடக்கச் சொன்ஞன். மகரிஷியும் நடந்துசென்று எல்லோரும் சுமைகளை கீழே வைக்க இவர் சுமையை அவைகளின்மேலே

வைத்தனர். எல்லா விறகும் நெருப்புப் பற்றி எரிந்து பஸ்பமாயின. கண்டோர் எல்லோரும் நடுக்குற்று பிரம்மேந்திராள் திருவடியில் அடைக்கலம் புகுந்தனர். மற்றொரு சமயம் ஒரு நெற்குவியலின் அருகில் நடந்து கொண்டிருக்கும்போது நெற்குவியலின் காவலர்கள் இவரை அடிக்கத் தடிகளை ஓங்கிக்கொண்டு ஓடிவந்தனர். அருகில் வந்தவுடன் கால்களும் நடக்க முடியாமல், ஓங்கின கைகளையும் இறக்க முடியாமல் நின்றனர்.

காலையில் பண்ணையாட்கள் மரக்கட்டைகள் போல் அசையாமல் நிற்பதறிந்த ஜமீன்தார் பிரம்மேந்திரர் திருவடிகளில் சரண்புகுந்து மன்னிப்புப் பெற்று நலன்பெறச் செய்தார். இன்னொரு சமயம் காவிரிநதி மணலில் நிஷ்டையில் இருக்கும்போது நதி பெருகி உடலை மணல் மறைத்துவிட சில காலத்திற்குப் பிறகு மணலைப் பறிக்கும்போது தூங்கி எழுந்தவர் போன்று எழுந்து நடந்த மஹாயோகி சதாசிவப் பிரம்மம் ஆகும். ஆகவே அன்னார் உலகை மறந்தவர், திக்கு, தேசாதிகள் இறந்தவர், திகம்பரர், மெய்ஞ்ஞான இலக்கணங்களும், அனுபவமும் நிறையப் பெற்றவர் ஆகும்.

உடலை மறந்து உலகெங்கும் சஞ்சரிக்கலானார். புதுக்கோட்டைக் காடுகளில் வைக்கோல் போருக்கடியில் சிலகாலம் கிடந்தார். வைக்கோல் அகற்றப்பட்டபோது எழுந்து நடந்தார். அதுகண்ட புதுக்கோட்டை மகாராஜா விஜயரகுநாதத் தொண்டமான் சரண்புகுந்து தீக்ஷைபெற்றார். தீக்ஷா மந்திரம் எழுதப்பெற்ற மணலை அங்கவஸ்திரத்திலேந்திவந்து அரண்மனையில் ஒரு பொற்பேழை செய்து அதில் வைத்துக்கொண்டார். புதுக்கோட்டைக்கருகிலுள்ள திருவரங்குளம் காடுகளில் சதாசிவப்பிரம்மம் தங்கித் தவமியற்றுமக்காலத்தில் 1752-ல் சிவஞானபுரம் துரையெனச் சிறப்புப்பெயருடன் வழங்கும் விஜயரகுநாதத் தொண்டமான் அடிக்கடி பிரம்மேந்திராள் தவமியற்றும் இடம் சென்று சேவை புரிந்து தனக்குற்ற ஐயங்களை நீக்கிக்கொண்டு தானும் கடுந்தவம் இயற்றி வந்தார்.

மகாராஜாவுக்கு உண்டாகும் சந்தேகங்களை மணலில் எழுதி நிவிர்த்தி செய்வாராயினர். மகாராஜாவும் பேராதரவோடு மணலில் எழுதப்பட்ட அக்ஷரங்களை உள்ளத்தில் அமைத்துக்கொண்டு மீண்டும் மணலைப் பொற்பேழையில் எடுத்துவைத்துவிடுவார். இப்படியாகச் சில வருடங்கள் பிரம்மேந்திராளைப் பின்பற்றிப் பல விஷயங்களைக் கேட்டுத் தான்

தெளிந்த நிலையில் தவமியற்றினர். பிரம்மேந்திராள் உத்திரவுப்படி பிக்ஷாண்டார் கோயில் கோபால கிருஷ்ண சாஸ்திரிகளை அரச சபைக்கு அழைத்துவந்து வேண்டிய சன்மானங்கள்தந்து அங்கேயே வைத்துக் கொண்டு சாஸ்திர பாடங்களும் கேட்டார். விஜய ரகுநாதத் தொண்டமான், சதாசிவேந்திரரைச் சந்தித்து அடைக்கலம் புகுந்த நாள் முதல் புதுக்கோட்டை ராஜ்யத்தில் பல நலன்களும் பெருக ஆரம்பித்தன. அச்சமயத்தில் பிரஹதாம்பாள் கோயிலில் நெய் விளக் கேற்றி வைக்கும்படி உத்திரவிட்டுப் பிரதி வாரமும் தீபத்திற்குப்போதிய அளவு நெய்யை அரண்மனையி லிருந்தே அனுப்பும்படியும் கட்டளையிட்டார். இன்றும் அதுபடியே பிரஹதாம்பாள் கோயிலுக்கு அரண் மனையில் இருந்தே நெய் அனுப்பப்படுகிறது. பிரம்மேந் திராள் திருக்கரங்களால் மன்னனுக்கு மந்திரங்கள் எழுதிக்காண்பித்த மணலை இன்றும் அரண்மனையில் அர்ச்சித்து ஆராதித்து வருகின்றனர். ஒரு சமயம் சதாசிவேந்திரர் பிரஹதாம்பாள் கோயிலில் அர்ச்சனை தொடங்கும்போது ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஒவ்வொரு புஷ்பமாக பிரஹதாம்பாள் திருவடியில் உதிர்ந்தது. மற்றொருபோது சதாசிவேந்திரர் பிரஹதாம் பாளுக்கு கனகமணி மாலையணிவித்துள்ளார். மாலையின் நாயகமணியில் "பிரஹதாம்பாள் சரண சேகர சதாசிவம்" என்று எழுதப்பெற்றிருக்கிறது. கனகமணி

மாலை பிரஹதாம்பாள் கோயில் ஆபரணங்களின் சிரோரத்தினமாகத் திகழ்கிறது.

புதுக்கோட்டை அரச குலகுருவாக இருந்த பிரம்மேந்திராள் புதுக்கோட்டை எல்லையைக் கடந்து செல்ல நினைத்த காலத்தில் மஹாராஜா தேவரீர் உடலை மறைக்க நினைக்கும் காலத்தில் சிறியேனுக்கு அறிவிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டார். மஹாராஜா ஆழ்ந்த குருபக்தியுடையவராய் பிரம்மேந் திராள் உருவச்சிலை ஒன்று செய்து பிரஹதாம்பாள் கோயிலில்வைத்து இன்றும் பூஜைநடத்தி வருகின்றனர். சதாசிவப்பிரம்மேந்திராள் ஆசிபெற்ற அரசகுலம் இன்றும் பல நலன்களோடு மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

சதாசிவேந்திரர் ஆத்மவித்யா விலாசம், யோக சுதாகரம், சித்தாந்த கல்பவல்லி, பிரம்ம சூத்திரவிருத்தி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். தஞ்சாவூர் புன்னைவனக்காடுகளில் தவமியற்றுங் காலத்தில் தஞ்சாவூர் மஹாராஜா பிரார்த்தித்துக் கொண்டபடி புன்னைநல்லூரில் மாரியம்மன் விக்கிரகம் செய்து மந்திர சக்கரமும் எழுதித்தந்து ஆலயத்தில் வழிபாடு செய்கின்றவர்களுக்கு எல்லா நலன்களும் பெருகுமாறு ஆசீர்வதித்திருக்கின்றார். இன்றும் புன்னைநல்லூர்

மாரியம்மன் கோயிலில் ஆதரவோடு வழிபாடு செய்கின்றவர்களுக்கு எல்லா நலன்களும் பெருகிக்கொண்டிருக்கின்றதென்பது பிரசித்தம். கரூருக்கு அருகாமையிலுள்ள 'தாந்தோணி மலையிலுள்ள மகாஜனங்கள் திருப்பதி வெங்கடேசப் பெருமானைச்சென்று சேவித்து வருவது மிகச் சிரமமாக இருக்கிறது, தேவரீர்! எங்கட்கு வெங்கடேசப் பெருமானை தரிசித்தால் உண்டாகும் பலனை தாந்தோணி மலையிலுள்ள பெருமாள் தரிசனத்திலேயே கிடைக்குமாறு அனுக்கிரகிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். மஹாஜனங்களின் வேண்டுகோளுக்கிணங்கி சதாசிவப் பிரம்மேந்திராள் ஜநகருஷண சக்கரம் ஒன்றை எழுதிவைத்து விஷ்ணு சகஸ்ரநாமத்தால் பெருமானை அர்ச்சித்து ஆராதித்து வேண்டுவார் வேண்டும் வரங்களை ஈயுமாறு அனுக்கிரகித்தனர். அதுமுதல் தாந்தோணி அப்பர் வழிபாட்டால் மக்கள் எல்லா நலன்களும் பெற்று மகிழ்கின்றனர்.

இப்படியாகப் பிரம்மேந்திராள் செய்த சித்திகள் சொல்லிலும், ஏட்டிலும் அடங்காது. ஒரு சிறிது கூறினேம். சித்திகளில் பற்றுடையவரல்லர் சதாசிவேந்திரர். எப்பொழுதும் பர தத்துவத்தில் திளைத்த மனமுடையவர். இயல்பாக நிகழும் சித்திகளில் கருத்துடையவரல்லர். உடலை மறந்து உலகெங்கும் சஞ்சரித்துள்ளார். சச்சிதானந்த சொரூபம் தானெனவும் உடல்

மித்தையெனவும் திட அனுபவமுடைய அவர், ஒரு சமயம் சஞ்சார சமாதியில் இருக்கும்போது ஒரு முஸ்லீம் அரசனுடைய அரண்மனைக்குள் நடந்துகொண்டிருந்தார். கதவுகள் தடையின்றித் திறந்திருக்கக் கொலு வீற்றிருக்கும் அரசன் முன்னிலையில் திகம்பரராய் நடந்து அந்தப்புரம் போகும் வழியில் சென்றுகொண்டிருந்தார். திக்குதேசாதிகள் இறந்த நிலையில் நடந்துசெல்லும் இவரை அரசன் அறியாமையினால் யாரோ ஒரு பித்தன் ஆடை ஆபரணமின்றி அந்தப்புரம் செல்கின்றானென்ற கோபத்தால் சதாசிவேந்திரர் கைகளை வாளால் தடிந்து விட்டான். உடலுணர்வின்றிய பிரம்மேந்திரர் வெட்டுண்டதையுணராதவராய் யாதோ ஒன்று தடைபட்டது போல் உணர்ந்து வந்தவழியே திரும்பி நடந்தார். கைகளிலிருந்து இரத்தம் அருவி போன்று பெருகிற்று. நிஸ்சப்தமாக யாதொரு குறிப்புமின்றிச் செல்லும் இவரைக்கண்ட அரசன் யூகித்துத் திகிலடைந்து, கலக்கமுற்றுப் பைத்தியக்காரன் நானேயாம். இவரோ மஹாபுருடர். நான் பெருந்தீங்கிழைத்துவிட்டேன். இவரிடம் மன்னிப்புக் கிடைத்தாலன்றி உயிர்தரித்திருப்பதில்லையென்றஎண்ணங்கொண்டு கீழே விழுந்து கிடந்த கையை எடுத்துக்கொண்டு விரைந்தான். சதாசிவப்பிரம்மத்தின் திருவடிகளை இறுகப்பற்றிக் கொண்டு மன்னிப்புக்கோரி அலறி அழுதான். குற்றமுணர்ந்த இவன் கோரிக்கைக்கு இரங்கி உணர்வுவடி-

வான பிரம்மேந்திரரது உள்ளம் சிறிது பகிர்முகவுணர்ச்சி பெற்றது. நிகழ்ந்ததை அரசன் உரைக்க மன்னித்துக் கரத்தை இருந்த இடத்தில் பொருத்திக்கொண்டார். இரத்தம் சொட்டுதலின்றி மாசுமறுவின்றிக் கரங்கள் விளங்கலாயின. ஒன்றுமறியாதவர்போல் மறைந்து சென்றுவிட்டார்.

சதாசிவப்பிரம்மம் வாரஞ்சி, மானுமதுரை முதலிய இடங்களிலும் தவமியற்றியிருக்கிறார் என்றும்தெரிகிறது. அபூர்வ சித்திகளும் ஆழ்ந்த ஆத்மானுபவமும் பெற்ற யோகி சதாசிவப்பிரம்மம். யோகிகளுக்கு யோகியாய், ஞானிகளுக்கு ஞானியாய், சக்கரவர்த்திகளுள் சக்கரவர்த்தியாய், திகம்பரர்களுள் திகம்பரராய்ப் பல லீலைகளும் இயற்றிய பிரம்மம், முடிவில் நெரூரில் உடலை மறைத்துவிட எண்ணி, முன்பு தான் தவமியற்றி எல்லா நலனும் எய்திய இடத்தில் உட்கார்ந்துகொண்டு யோக வலியால் மஹாராஜாக்களுக்கு உணர்த்தினார். புதுக்கோட்டை மன்னன், தஞ்சாவூர், மைசூர் மஹாராஜாக்களும் நெரூருக்கு விரைந்துவந்து குருநாதர் திருவடிகளை தரிசித்து உத்திரவை எதிர்பார்த்து நின்றனர். அவ்வமயம் தமது பிரதம சீடரான புதுக்கோட்டை மன்னர் விஜயரகுநாதத் தொண்டமானிடம் குகை அமைக்கச்செய்து குறிப்பிட்ட நாளில் அதில் உட்கார்ந்துகொள்வேன். விதிப்படி சாமக்கிரிகைகளை

மேலே நிரப்பி மண்ணால் மூடிவிடவேண்டும் என்று தெரிவித்தார்கள். விஜயரகுநாதத் தொண்டமான் உயிரோடு குருநாதர் உடலை மண்ணால் மூடுவதற்கு அஞ்சி, தேவரீர் இப்படியே எங்களுக்குத் தரிசனம்தந்து கொண்டிருந்தால் மகிழ்வோடு இருப்போம் என்று பிரார்த்தித்தார். அதற்குச் சதாசிவப்பிரம்மம் இவ்வுடலை குகையில் வைத்து மண்ணால் மூடுவதால் நான் மரணம் அடைந்துவிடமாட்டேன். எப்பொழுதும் ஒரு படித்தாகவே இருப்பேன். முன்னம் காவிரி மணலில் இவ் உடல் புதைந்து கிடந்தது நீ அறியாயோ? இதுபோன்ற வசனங்களால் மன்னனைத் தேற்றிக் குறிப்பிட்ட தினத்தில் குறிப்பிட்ட நேரத்தில் குகையில் உட்கார்ந்து கொள்வேன்; வில்வம், விபூதி, கூடம், மண் முதலியன கொண்டு மேலே நிரப்பி உடலை மறைத்து மேடை செய்துவிடவேண்டும். அதில் ஒன்பதாவது நாள் வில்வ விருக்ஷம் தோன்றும். அதை அப்படியே விட்டுவிடவும். பன்னிரண்டாவது நாள் காசியிலிருந்து ஒரு பிரமசாரி சிவலிங்கம் கொண்டுவருவான். விருக்ஷத்திற்குப் பன்னிரண்டு அடிக்குக் கீழ்ப்புறம் சிவலிங்கத்தை ஸ்தாபனம் செய்து, கோயில் அமைத்து விதிப்படி பூஜைகளை நடத்தலாம். வில்வ விருக்ஷத்தின் நாற்புறமும் திறந்த வெளியாகவே இருக்கட்டும் என்று கூறினார். இது துவாதசாந்தப் பெருவெளியில் வீற்றிருக்கும் குறிப்பு.

எங்கும் எல்லாப் பொருள்களிலும் சச்சிதானந்த சொருபமாய் நிறைந்து நிற்பது சதாசிவப்பிரம்மம். இவ்வித அதிஷ்டானம் உலகில் அதிசயம். பிரம்ம நிஷ்டா பண்டிதர்களில் தலை சிறந்தவர் சதாசிவப் பிரம்மம். சதாசிவப்பிரம்மத்தின் நாமம் புகல்வார்க்கும் விரும்பிய நலன்கள் கிடைக்கப்பெறும் என்பது சாஸ்திர சம்மதம்.

''பலன்கள் வேண்டிலப் பரிசெலாம் பலித்திடும் பரமதத் துவஞானி
நலன்கொள் நாமமாம் மந்திரம் ஜெபித்திட நயந்தவன் நீராடும்
சலம்கொள் தீர்த்தமாம் அவன்திரு மேனியே சகல தெய்வமும் செவ்வாய்
மலர்ந்த வாசகம் மறுபிறப் பெனவரும் மயற்பிணி மருந்தாகும்''

குருநாதர் உத்திரவுப்படியே யாவும் நிறைவு பெற்றது. சமாதிக் குகையில் உட்காரும் சமயம் காசியிலும், மானாமதுரையிலும் உள்ள தனது பக்த மகாஜனங்கட்கும் தரிசனம் தந்திருக்கின்றார். காசியிலும், மானாமதுரையிலும் உள்ள பக்தர்களும் நெரூரில் நடந்ததுபோலவே சதாசிவப்பிரம்மம் குகையில் உட்கார்ந்தவுடன் விபூதி, சூடம், மண் முதலியன கொண்டு மூடி ஆராதித்தனர். ஒரே சமயத்தில் மூன்று உடல்களை மூன்று இடங்களில் உகுத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. பிரதானம் நெரூராகும். சதாசிவப்பிரம்மம் நெரூரில் ஜீவ சமாதி பெற்று சுமார் 230 வருடம் ஆகிறது என்று தெரிகிறது.

இன்றைக்கு (60) அறுபது வருடங்கட்கு முன்பு சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடத்தில் ஜகத்குருவாக இருந்த சச்சிதானந்த சிவாபினவ நரசிம்மபாரதி சுவாமிகள் தனக்குற்ற ஐயத்தை நீக்கிக்கொள்ள நெரூருக்கு யாத்திரையாகப் புறப்பட்டார். வழியில் மகாதானபுரத்தில் சில தினம் தங்கி நெரூர் வரும்வழியில் அரங்கநாதம்பேட்டை என்னும் கிராமத்துக் கருகாமையில் வடக்கு நோக்கி வரும்போது பல்லக்கு சுமந்துவரும் போகிகள் நடக்க முடியாமல் பின்னுக்கு நகர்ந்தனர். ஆசார்ய சுவாமிகள் நெரூருக்கு விரைந்து நடவுங்கள் என்று கூறினர். போகிகள் முன்புறமிருந்து யாரோ ஒருவர் பின்னுக்கு உந்தித் தள்ளுவதுபோன்றிருப்பதால் எங்களால் நடக்க முடியவில்லை என்று கூறினர். ஆசார்ய சுவாமிகள் உடனே பல்லக்கு விட்டிறங்கி திக்கு நோக்கித் தெண்டனிட்டுச் சிரமேல் கரங்குவித்துக் கொண்டு இரண்டுமைல்தூரம் நடந்து பிரம்மேந்திராள் அதிஷ்டானத்தை அடைந்து சந்தேக நிவர்த்தி கிடைக்குமென்று நிச்சயத்துடன் மூன்று நாட்கள் இரவும் பகலும் அதிஷ்டானத்தின் முன்னிலையில் உட்கார்ந்து தியானத்தில் ஆழ்ந்தார். இம்மஹாபுருஷர் ஆதரவோடு பிரம்மேந்திராள் அனுக்கிரஹத்தைப் பெற்றார். மூன்ருவது நாள் இரவு இவர் வினக்களுக்கு யோக வலியால் விடைபகர்ந்தார் சதாசிவப்பிரம்மம். உடனே சரண்புகுந்து திரிகரணவழிபாடியற்றி சச்சிதானந்த

சிவாபினவ நரசிம்மபாரதி சுவாமிகள் சதாசிவப் பிரம்மேந்திரரை நாற்பத்தைந்து சுலோகங்களால் துதித்தனர். அன்று முதல் பிரம்மேந்திராள் திருவுருவப் படத்தைத் தம்பல்லக்கின் முன்புறம் வைத்துக்கொண்டு சதா தியானித்துப் பிரம்மேந்திராள் பெற்ற நிலையைத் தாமும் பெறவேண்டும் என்ற முயற்சியைப் பெருக்கிச் சொரூபத்தில் இரண்டறக் கலந்தார் என்று தெரிகிறது. அன்றும் இன்றும் சதாசிவப்பிரம்மத்தின் திருவுருவத்தில் அவருடைய கீர்த்தனங்களில் அவர் செய்த சாஸ்திரங்களில் ஆதரவு பற்றித் தியானித்துத் துதிப்பவர்கட்கு எல்லா நலன்களும் கைகூடுமென்பது சர்வ நிச்சயம்.

சுபம் !　　　　சுபம் !!　　　　சுபம் !!!

(சதாசிவப்பிரம்மேந்திராள் சரித்திரச் சுருக்கம் முற்றிற்று.)

ரமணி பவர் பிரஸ், குகை, சேலம்-6　போன்: 3745

ரமணி பவர் பிரஸ், சேலம்-6 போன்: 3745